அரிமா

# நோக்கு

1:4 சனவரி 2008

ரூ. 20/-.

ஆசிரியர்:

ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு,
வரலாறு, மெய்யியல், அறிவியல் சார்
பன்னாட்டுக் காலாண்டிதழ்

அரிமா
நோக்கு
1:4 சனவரி 2008

சித்திரக் கவி
- வ. ஜெயதேவன் 03
பாரதியின் கேரளச் சித்திரம்
- கி. நாச்சிமுத்து 05
பதுமக்கொத்தர் யார்?
- நா. கணேசன் 12
Dorris Lessing 19
Nobel Laureates 21
கீதவாத்திய விநோதம் 22
மூவேந்தர்
உடன்படிக்கையும்
காரவேலன் கல்வெட்டும்
- இரா. மதிவாணன் 26
சாரியைகள் - ஏ ஆதித்தன் 29
வினா-விடை
- சோ. ந. கந்தசாமி 34
வாழையடி வாழை:
வள்ளலாரும் பாரதியும்
- ப. மருதநாயகம் 38
தளங்கள் 10
- மா. ஆண்டோ பீட்டர் 50
மலேசியத் தமிழ்ப்பள்ளி
களின் கற்றல் கற்பித்தலுக்கு
மென்பொருள்கள்,
இணையத் தளங்களின்
பயன்பாடு - மு. பரமசிவம் 52
எழுத்தாளர் சா. கந்தசாமி
அவர்களுடன் நேர்காணல்
- பெ. சுபாசு சந்திரபோசு 55
மேலை நாட்டுப்
பெண்ணியக்
கோட்பாட்டாளர்கள்
- இரா. பிரேமா 61
அரசினர் கீழ்த்திசைச்
சுவடிகள் நூலகம்
- கோ. வெற்றிச்செல்வி 66
காழ்
- கே.என். சிவராஜபிள்ளை 69
சிதறிக்கிடக்கும் பழந்தமிழ்
நூல்கள் - பா. மதுகேஸ்வரன் 71
நூல் அறிமுகம், ஆய்வாளர்
அறிமுகம், எதிரொலி,
கவிதைகள், துணுக்குகள்

படைப்புகளைச்
சுருக்கவும், திருத்தவும், மாற்றவும்
பதிப்பாளருக்கு உரிமை உண்டு.
முன்இசைவின்றி இவ்விதழிலிருந்து
எதனையும் எடுத்தாளலாகாது.

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## உலகத் தமிழ் இலக்கியங்களின் ஒருங்கிணைப்பு

அண்மையில் மலேசியா-சிங்கப்பூர் எழுத்தாளர்கள் குழு தமிழ்நாட்டிற்கு வந்திருந்த போது, தமிழக அரசின் சார்பிலான சிறப்பான வரவேற்பைப் பெற்றதோடு, எழுத்தாளர்கள் சந்திப்பு, கருத்துப் பகிர்வு, பரிமாற்றம் என்று பல தளங்களில் ஆர்வமும் அக்கறையும் ததும்பப் பதிவுகள் நிகழ்த்தியதைப் பாராட்ட வேண்டும்.

முத்துப்பேட்டையைச் சேர்ந்த பெருவாணிகரும் தமிழ்க் காதலருமாகிய சென்னை ரஹமத் அறக்கட்டளைத் தலைவர் மு. அ. முஸ்தபா அவர்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில், தமிழவேள் கோ. சாரங்கபாணி பெயரில் இருபத்தைந்து இலக்க உருபாய் முதலீட்டில் ஓர் அறக்கட்டளையை, மலேசியா-சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியப் பரவுகைக்கும் மேம்பாட்டுக்குமென இவ்வாண்டில் நிறுவியுள்ளதையும் இங்குக் குறிப்பிடுவது பொருந்தும்.

ஈழத்துத் தமிழ் எழுத்துக்களுக்குத் தமிழகத்தில் கிடைத்திருக்கும் அறிமுகத்திற்கும் வரவேற்புக்கும் நிகராகத் தம் மண்ணில் மலரும் படைப்புகளுக்குக் கிடைப்பதில்லை என்கிற மனக்குறையை ஓரளவு போக்கும் வகையில் மேற்குறித்த இரு நிகழ்வுகளையும் மலேசியா-சிங்கப்பூர் எழுத்தாளர்கள் எதிர்கொண்டிருப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை. ஈழம், மலேசியா, சிங்கப்பூர் எழுத்தாளர்கள் தவிர, இவ்வகையில் உடன் வைத்து எண்ணத்தக்க எழுத்தாளர்கள் வளைகுடா நாடுகளிலும் ஏன்? உலகெங்கும்கூட இருக்கின்றனர். பிரான்சிலும் கனடாவிலும் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் தமிழ் எழுத்தாளர்கள் இல்லையா என்ன?

'உலகத் தமிழ் நூல்கள் மையம்' ஒன்றை உலகத் தமிழர்கள் எல்லாரும் சேர்ந்து தாய்த் தமிழகத்தில் நிறுவி அதன் வழி உலகெங்கும் வெளியிடப்படும் தமிழ் நூல்களைத் திரட்டிவைக்க வேண்டும். மொழிபெயர் தேயங்களில் வாழும் தமிழர்கள் தாம் கால் பதித்திருக்கும் மண்ணின் மொழியைக் கற்றுத் தேர்ந்து உடனடியான இலக்கியப் பகிர்வுகளை அம்மொழியாளரோடு தொடங்க வேண்டும். அயல்நாட்டுத் தமிழறிஞர்கள் தமிழகத்திலிருந்து செய்த ஆக்கப் பணிகளை அயலகங்களில் வாழும் தமிழர்கள் கருத்தில் கொண்டு கடனாற்றின் தமிழ்ப்பயன் கொழிக்கும்; செழிக்கும். எடுத்துக்காட்டாக, மலேசியாவில் வாழ்கிற தமிழ் எழுத்தாளர்கள் அம்மண்ணில் செய்யப்படும் மலாய், சீன மொழிகளின் இலக்கிய முயற்சிகளை அறிவதோடு - அம்மொழிகளில் இருந்து நாம் பெறவும் அம்மொழிகளுக்கு நாம் தரவும் என்ன உண்டு - அவற்றைச் செய்து முடிக்க என்ன வழிவகைகள் என்றெல்லாம் சிந்திக்க வேண்டும். இப்படி, உலகெங்கும் வாழ்கிற தமிழ் எழுத்தாளர்கள் தமிழ்ப் படைப்புகளில் ஈடுபாடு கொள்வதோடு ஒருங்கிணைப்பைத் தாய்த் தமிழகத்தோடு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

'தமிழ் இலக்கிய வரலாறு' என்பதை இனி, தமிழ்மண் வரம்போடு நிறுத்திக்கொள்வது அறமாகாது. ஓரளவு ஈழத்து எழுத்துகளுக்கு இடம் ஒதுக்கப்படுகிற நிலையைக்கூட, நாம் தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்களிடம் பரவலாகக் காண முடியவில்லை. ஈழத்துத் தமிழ் இலக்கியங்கள் குறித்து அந்நாட்டுத் தமிழ் அறிஞர்கள் எழுதியிருப்பினும், அம்முயற்சிகள் தமிழகத்தில் போதுமான அளவு பார்வை பெறவும் இல்லை; பரவவும் இல்லை.

இலக்கிய வரலாறு குறித்ததான பன்முக அறிவியல் பார்வைகளை உள்வாங்கிக் கொண்டு, விரிவான முறையில் உலகத் தமிழ் இலக்கிய வரலாற்றை உருவாக்கச் சென்னையில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் முன்வர வேண்டும். உலக இலக்கியக் களஞ்சியங்களில், மேற்கோள் தொகை அகராதிகளில் தமிழும் தமிழ்ப் படைப்புகளும் இடம்பெற உலகத் தமிழ் இலக்கியங்களின் ஆங்கிலப் பெயர்ப்புகளை உலகெங்கும் பரவியிருக்கும் இன்றைய ஆங்கில மொழிநடையில் உருவாக்க வேண்டும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஒரு பிரிவு உலகத் தமிழ் எழுத்தாளர் மையமாகவும் செயல்படும் எனில் நாம் கருதும், கனவும் வினைகளும் விளைவுகளும் தொட்டுவிடும் தூரத்தில்தான்!

ஆசிரியர்
ஈரோடு தமிழன்பன்
இணையாசிரியர் (மதிப்புறு நிலை)
வ. ஜெயதேவன்
ஆசிரியர் குழு
சிலம்பொலி சு. செல்லப்பன்
கா. செல்லப்பன்
இரா. இளவரசு
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
நா. முத்துக்குமார்
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
அறிவுரைக் குழு
அ. அறிவுநம்பி
சி. மா. இரவிச்சந்திரன்
இராதா செல்லப்பன்
க. இராமசாமி
கு. இன்னாசி
ஆறு. இராமநாதன்
கம்பம் சாகுல் அமீது
தி. கமலி
ம. திருமலை
கி. நாச்சிமுத்து
க. பஞ்சாங்கம்
துரை. பட்டாபிராமன்
தொ. பரமசிவம்
பாலா
அ. பிச்சை
மு. மணிவேல்
இ. மறைமலை
பழ. முத்துவீரப்பன்
இரா. மோகன்
பெ. மாதையன்
சு. வேங்கடராமன்
டேனியல் சங்கீதம்
பதிப்பாளர்
இரா. பன்னிருகைவடிவேலன்
பதிப்புக் குழு
ப. குமார் வை. சிவநேசன்
கோ. வெற்றிச்செல்வி
கி. காவேரி கு. சுபாஷிணி
அ. செந்தில்நாராயணன்
ஏ. கோதண்டராமன்
துணைப் பதிப்பாளர்
'விழிகள்' தி. நடராசன்
அச்சீட்டாளர்
செ. இரா. சோபனா
கணினிவழி வடிவமைப்பு
இல. கணேசன்


## புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்து

புரவலர்கள், வாழ்நாள் உறுப்பினர்கள், ஆண்டு உறுப்பினர்கள், ஈராண்டு உறுப்பினர்கள், விளம்பர முகவர்கள், விளம்பரம் நல்கிய பெருந்தகையாளர்கள், வாசகப் பெருமக்கள் அனைவருக்கும் புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்களை அரிமா நோக்கு தெரிவித்துக்கொள்கிறது.

## வாழ்நாள் உறுப்பினர்கள்

43 முனைவர் ந. ஆனந்தி
44 முனைவர் ச. சுந்தர்
45 திரு ம. லோகநாதன்
46 முனைவர் ப. மருதநாயகம்
47 முனைவர் இரா. இராசேந்திரன்
48 முனைவர் மு. இளமுருகன்
49 திருமதி நா. சுப்புலட்சுமி
50 திருமதி மு. நளினி
51 முனைவர் மு. வையாபுரி

## கட்டண விவரம்

ஈராண்டுக் கட்டணம் ரூ. 150/- US $ 10
வாழ்நாள் கட்டணம் ரூ. 2000/- US $100
புரவலர் கட்டணம் ரூ. 5000/- US $200
நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) ரூ. 10,000/-

- நிறுவனம் சார் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுதும் நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 60% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- புரவலர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

### விளம்பரக் கட்டணம்

பின்னட்டை (பல வண்ணங்கள்) ரூ. 15, 000
உள்ளட்டை (பல வண்ணங்கள்) ரூ. 10, 000
முழுப்பக்கம் (கருமை & வெண்மை) ரூ. 3, 000
அரைப்பக்கம் (கருமை & வெண்மை) ரூ. 1, 500

தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகைமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.

வாழ்நாள் உறுப்பினராக விழைவோர் 4 அல்லது 8 தவணைகளிலும் கட்டணம் செலுத்தலாம்.

ஆண்டு/ஈராண்டுக் கட்டணம் செலுத்தியவர்கள் எஞ்சிய தொகையை முழுமையாகவோ அல்லது குறைவான தவணைகளிலோ செலுத்தி வாழ்நாள் உறுப்பினராகலாம்.


அரிமா நோக்கு

4/ 1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை, கொட்டிவாக்கம், சென்னை 600 096

வலைத்தளம்: www. arimaanokku.com மின் அஞ்சல்: tamilnokku@rediffmail.com செல்: 9380626448


All Institutions are attached
and also Transport Facilities.